JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **277/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 9** | Prosecution /Defence / Court | |
| Name | **Radhakrishnan (ADSP Retired)** | Village | |
| Father's Name | **Venkatachalam** | Taluk | |
| | | Age | |

**Accused absent. U/s.317 Cr.P.C. Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 06.10.2025.**

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் தமிழ்நாடு காவல் துறையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக கோயம்புத்தூர், கோவை புதூரில் தமிழ்நாடு சிறப்பு காவல் படை அணி எண். 3 ல் பணிபுரிந்து கடந்த 31.07.2022 ம் தேதி பணி ஓய்வு பெற்று கோவையில் வசித்து வருகிறேன். நான் பெருந்துறை காவல் நிலையத்தில் கடந்த 01.02.2010 ம் தேதி கொடுமுடி காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கொடுமுடி பைபாஸ் ரோட்டைச் சேர்ந்த பொன்னுசாமி மகன் மாரிமுத்து என்பவர் இரவு 8.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் கருப்பாயி மற்றும் லட்சுமி மற்றும் அவருடன் சாட்சிகள் வெங்கடாசலபதி, சங்கர் ஆகியோர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்றும் கொடுமுடி காவல் நிலைய குற்ற எண். 38/2010 சட்டபிரிவு 379 (ஜேப்படி) இ.த.ச. பிரிவின் படி வழக்கு பதிவு செய்ததை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு பின் எதிரிகள் கருப்பாயி மற்றும் லட்சுமி ஆகியோரை இரவு 8.30 மணிக்கு கைது செய்து பெண் காவலர்கள் 2414 ராஜாம்மாள் மற்றும் பெண் காவலர் 2134 அம்முக்குட்டி ஆகியோர்கள் உதவியுடன் விசாரணை மேற்கொண்டதில் எதிரி கருப்பாயி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை வெங்கடாசலபதி

மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையெழுத்து பெறப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கருப்பாயி தன்னை கூட்டிச் சென்றால் பெருந்துறை வெள்ளிக் கொலுசு நகை கடையின் வெள்ளிக் கொலுசுகளை வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாக தெரிவித்தார். **அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின் எதிரி லட்சுமியை பெண் காவலர்கள் 2414 ராஜம்மாள், 2134 அம்முக்குட்டி ஆகியோர் உதவியுடன் எதிரி லட்சுமி என்பவரை சாட்சிகள் வெங்கடாசலபதி மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் 01.02.2010 ம் தேதி 24.00 மணிக்கு விசாரிக்க எதிரி லட்சுமி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் வெங்கடாசலபதி மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி லட்சுமியிடமும் சாட்சிகள் வெங்கடாசலபதி மற்றும் சங்கர் ஆகியோர்களிடமும் கையொப்பம் பெற்றேன். எதிரி லட்சுமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துச் சென்றால் தான் பெருந்துறை வெள்ளிக் கொலுசு நகை கடையின் வெள்ளிக் கொலுசுகளை வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாக தெரிவித்தார். **அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின் கொடுமுடி உதவி ஆய்வாளர் செந்தில்குமார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை எண். 39/2010 சட்டப்பிரிவு 379 இதச (ஜேப்படி) வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் அதன் எதிரிகள் பஞ்சம்மாள் மற்றும் வசந்தி ஆகியோரை என்னிடம் ஆஜர் செய்ததை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எதிரி பஞ்சம்மாள் என்பவரை 02.02.2010 ம் தேதி அதிகாலை 2.00 மணிக்கு பெண் காவலர்கள் 2414 ராஜம்மாள், 2134 அம்முக்குட்டி ஆகியோர் உதவியுடன் விசாரிக்க எதிரி பஞ்சம்மாள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் வெங்கடாசலபதி மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து அதில் எதிரிகள் மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெறப்பட்டது.

3. எதிரி பஞ்சம்மாள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துச் சென்றால் தான் பெருந்துறை வெள்ளிக் கொலுசு நகை கடையின் வெள்ளிக் கொலுசுகளை வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாக தெரிவித்தார். **அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ. 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின் எதிரி

வசந்தியை பெண் காவலர்கள் 2414 ராஜம்மாள், 2134 அம்முக்குட்டி ஆகியோர் உதவியுடன் அதிகாலை 4.00 மணிக்கு விசாரிக்க எதிரி வசந்தி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் வெங்கடாசலபதி மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து அதில் எதிரிகள் மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெறப்பட்டது. எதிரி வசந்தி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துச் சென்றால் தான் பெருந்துறை வெள்ளிக் கொலுசு நகை கடையின் வெள்ளிக் கொலுசுகளை வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாக தெரிவித்தார். **அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** பின் எதிரிகள் நால்வர் மற்றும் ஆண், பெண் வழிக்காவலர்கள் 2414 ராஜம்மாள், 2134 அம்முக்குட்டி மற்றும் காவலர்கள் சாட்சிகள் வெங்கடாசலபதி மற்றும் சங்கர் ஆகியோர்கள் புறப்பட்டு திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலூக்கா , ஆவாரம்பட்டி சென்று வடக்கு தெருவில் எதிரி **கருப்பாயி** தன் வீட்டை அடையாளம் காட்டி வீட்டிற்கு பின்னால் மறைத்து வைத்திருந்த 10 ஜோடி வெள்ளிக் கொலுசுகளை சுமார் 9 ½ இன்ச் நீளம் கொண்ட ரோஸ் கலர் நூல் போட்டு கட்டியிருந்த கொலுசுகளை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் வெங்கடாசலபதி மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் 02.02.2010 ம் தேதி 10.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் இருவரிடமும் சாட்சி கையொப்பங்களை பெற்றேன். **(கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ. 8 ஆக அ.சா. 5 ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது)** எதிரி **லட்சுமி** கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளபடி ஆவாரம்பட்டி கிழக்கு வீதியில் உள்ள தனது வீட்டை அடையாளம் காட்டி வீட்டிற்குள் மறைத்து வைத்திருந்த 9 ஜோடி வெள்ளிக் கொலுசுகளை சுமார் 9 ½ இன்ச் நீளம் கொண்ட பச்சை கலர் நூல் போட்டு கட்டியிருந்த கொலுசுகளை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் வெங்கடாசலபதி மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் 02.02.2010 ம் தேதி 12.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் இருவரிடமும் சாட்சி கையொப்பங்களை பெற்றேன். **(கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ. 9 ஆக அ.சா. 5 ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது)**

5. எதிரி **பஞ்சம்மாள்** கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளபடி ஆவாரம்பட்டி கிழக்கு வீதியில் உள்ள தனது வீட்டை அடையாளம் காட்டி வீட்டிற்குள் மறைத்து வைத்திருந்த 9 ஜோடி வெள்ளிக் கொலுசுகளை சுமார் 9 இன்ச் நீளம் கொண்ட பச்சை கலர் நூல் போட்டு கட்டியிருந்த கொலுசுகளை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் வெங்கடாசலபதி மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் 02.02.2010 ம் தேதி 13.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் இருவரிடமும் சாட்சி கையொப்பங்களை பெற்றேன். **(கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ. 10 ஆக அ.சா. 5 ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது)** எதிரி **வசந்தி** கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளபடி ஆவாரம்பட்டி, கிழக்கு வீதியில் உள்ள தனது வீட்டை அடையாளம் காட்டி வீட்டிற்குள் மறைத்து வைத்திருந்த 9 ஜோடி வெள்ளிக் கொலுசுகளை சுமார் 9 இன்ச் நீளம் கொண்ட பச்சை கலர் நூல் போட்டு கட்டியிருந்த கொலுசுகளை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் வெங்கடாசலபதி மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் 02.02.2010 ம் தேதி 14.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் இருவரிடமும் சாட்சி கையொப்பங்களை பெற்றேன். **(கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ. 11 ஆக அ.சா. 5 ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது)**

6. பின்னர் எதிரிகள் கருப்பாயி, லட்சுமி, பஞ்சம்மாள், வசந்தி ஆகியோர்களுடன் நிலையம் வந்து பதிவேடுகளில் பதிவு செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மகஜர் சாட்சிகளான வெங்கடாச்சலபதி மற்றும் சங்கர் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்தேன். பின் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூல நகல்கள் ,கைப்பற்றுதல் மகஜர் நகல்கள், சாட்சிகளின் வாக்குமூல நகல்கள் இவைகளை சான்றிட்டும், 4 எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தான வெள்ளிக் கொலுசுகளை தனித்தனியான படிவம் 91 (4 எண்ணிக்கையை) பெருந்துறை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைக்கப்பட்டது. **படிவம் 91 அ.சா.ஆ.18 முதல் அ.சா.ஆ. 21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிகள் நான்கு பேரும் கொடுமுடி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதன் பேரில் கைது செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான். அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான். எதிரிகள் திருடியதற்கான சிசிடிவி ஃபுட்டேஜ் கொடுத்ததால் அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை. எதிரிகளின் வீட்டிற்கு எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் எதிரிகளும், இரண்டு பெண் காவலர்களும், இரண்டு ஆண் காவலர்களும், சாட்சிகளும் , நானும் சென்றேன். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் போலீஸ் வாகனத்தில் சென்றோம். எதிரிகளுடைய வீடு எந்த திசையில் உள்ளது என்று தற்போது நினைவில் இல்லை. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை, ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் போலீஸ் வாகனத்தில் செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது ஜோடிக்கப்பட்ட புள்ளி விவர கணக்குக்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை